செ.வெ.எண்.147 நாள்.07.03.2018.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியில் முதலாம் ஆண்டு (+1) பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில், மேல்நிலைப்பள்ளி முதலாம் ஆண்டு (+1 ) பொதுத் தேர்வு இன்று (07.03.2018) முதல் 16.04.2018 முடிய நடைபெறவுள்ளது. 123 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெறுகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை தூய சவேரியார் பள்ளியில் முதலாம் ஆண்டு (+1 ) பொதுத் தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் இன்று (07.03.2018) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழகத்தில் முதல் முறையாக முதலாம் ஆண்டு (+1 ) அரசு பொதுத்தேர்வாக அரசு அறிவித்து இவ்வாண்டு முதல் நடைபெறுகிறது. இவ்வாண்டு முதல் தேர்வு எழுதுவதற்கான நேரம் அரை மணி நேரம் குறைக்கப்பட்டு, இரண்டரை மணி நேரம் மட்டுமே தேர்வு எழுத கொடுக்கப்பட்டுள்ளது. அகமதிப்பீட்டு மதிப்பெண் அனைத்து பாடங்களுக்கும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில், மேல்நிலை முதலாமாண்டு +1 பொதுத் தேர்வு சேரன்மகாதேவி, தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று கல்வி மாவட்டங்களில் 123 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெறுகிறது. 17,374 மாணவர்களும், 22,085 மாணவிகளும் என மொத்தம் 39,459 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதுகின்றனர். இதில், 146 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளும் உள்ளனர். மாற்றுத்திறனாளிகளில் 24 கண் பார்வையற்ற மாணவ, மாணவிகளும் தேர்வு எழுதுகின்றனர். 55 மாற்றுத்திறனாளிகளுக்கு சொல்வதை எழுத ஆசிரியர்கள் (SCRIBE) நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்வு மையங்களில் 123 முதன்மை கண்காணிப்பாளர்கள், கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்கள், 123 துறை அலுவலர்கள், 2,265 அறை கண்காணிப்பாளர்கள், 8 பறக்கும்படை குழுவினர்கள், 248 நிலையான பறக்கும்படை உறுப்பினர்கள், 25 வழித்தட அலுவலர்கள் தேர்வு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தேர்வு மையங்களில் மாணவ, மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நேரங்களில் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்வுகள் நேர்மையான முறையில் நடைபெறுவதை கண்காணிக்க உயர் அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். தேர்வு மையங்களில் காவல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், நாட்டுநலப்பணித் திட்ட மாவட்ட தொடர்பு அலுவலர் திரு.தேவபிச்சை மற்றும் அலுவலர்கள் தேர்வு கண்காணிப்பு ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.